<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2014 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | மகாலிங்கம் | நாள் | 03.04.2025 |
| தகப்பனார் பெயர் | கண்ணுபையன் | | |

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

55) T.S.சிவசாமி என்பவரின் தந்தை பெயர் என்னவென்றால், சுந்தரராஜன் ஆகும். அவருக்கு ச.எண்.534/3C ல் எவ்வளவு நிலம் உள்ளது என்றால், 9 செண்ட் நிலம் உள்ளது. P.S.சிவஞான சுந்தரம் என்பவரின் தந்தை பெயர் என்னவென்றால், சுந்தரராஜன் ஆகும். மேற்படி சிவஞான சுந்தரத்திற்கு ச.எண்.534/3C ல் 0.13 செண்ட் நிலம் பட்டா படி பாத்தியப்பட்டுள்ளது. P.N.பரமசிவம் என்பவர் யார் என்றால், மேற்படி சுந்தரராஜன் என்பவரின் பெரியப்பா மகன் ஆவார். அவரது தந்தை பெயர் நடராஜன் ஆகும். அவருக்கு மேற்படி ச.எண்.534/3C ல் 0.13 செண்ட் நிலம் பாத்தியப்பட்டுள்ளது.

56) மேற்படி ச.எண்.534/3C ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 0.52 செண்ட் ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள சிட்டா எந்த வருடத்திற்கு உரியது என்றால், வருடம் தெரியவில்லை. ஆனால், UDR க்கு பிந்தையது. மேற்படி சிட்டாவில் 1, 3 பிரதிவாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 அடங்கல் கணக்கில் 1407 வது பசலி ஆண்டில் ச.எண்.534/3C ஆனது "P.S.சிவகாமி" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அதில் சிவகாமி என குறிப்பிடப்படவில்லை. அதில் சிவசாமி என தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

57) அதேபோல், பசலி ஆண்டுகள் 1407, 1408, 1413, 1414 ஆகியவற்றில் சிவகாமி, சிவசாமி என தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், வகையறா என எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரிதான். மேற்படி வா.சா.ஆ.8 அடங்கல் கணக்குகளில் பசலி ஆண்டுகள் 1407, 1408 ஆகியவற்றில் மட்டும் தான் துரஸ்து கிணறு என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். பசலி ஆண்டு 1408 ல் ச.எண்.

534/4ல் மாதம்மாள் பெயர் நீக்கப்பட்டு, கலா (எ) கலையரசி மற்றும் ராணி ஆகியோரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். பசலி ஆண்டுகள் 1408, 1413, 1414 ஆகியவற்றில் கலா (எ) கலையரசி பெயர் இடம் பெற்றுள்ளது என்றால், சரிதான்.

58) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 அ–பதிவேட்டில் ச.எண்.534/3C யார் பெயரில் உள்ளது என்றால், சிவசாமி மற்றும் ஐந்து நபர்கள் பெயரில் உள்ளது. மேற்படி சிவசாமியை தவிர ஐந்து நபர்கள் யார் என்பது குறித்து நான் விளக்கமான அ பதிவேட்டை பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது வழக்குரை சொத்து விவரத்தில் தாவா A மற்றும் B செட்டியூல் சொத்துக்களுக்கான பட்டா எண்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை.

59) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 கிரய ஆவணத்தில் யார் யாருக்கு கிரயம் அளித்துள்ளார்கள் என்றால், ஆண்டியப்ப கவுண்டர் மகன் P.A.சுந்தரராஜ கவுண்டர், பழனிகவுண்டர் மனைவி தங்கம்மாளுக்கு கிரயம் அளித்துள்ளார். ச.எண்.534/3 என மேற்படி வா.சா.ஆ.11 ஆவணத்தில் கண்டெழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். 0.30 சென்ட் நிலம் மேற்படி கிரயத்திற்குட்பட்டது என்றால், சரிதான். மேற்படி கிரய ஆவணத்தில் அதில் கண்டுள்ள சொத்து பிதுர்ராஜிய சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி சொத்திற்குரிய மூல ஆவணத்தையோ, பட்டாவையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், அ பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேன்.

60) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 கிரய ஆவணத்தின் பதிவு நகலின்படி யார் யாருக்கு கிரயம் அளித்துள்ளார்கள் என்றால், P.A.சுந்தரராஜ கவுண்டர் மகன் P.S சிவசாமி மற்றும் அவரது மகன் செல்வராஜ் ஆகியோர் சேர்ந்து பழனிகவுண்டர் மனைவி தங்கம்மாளுக்கு விற்பனை செய்துள்ளனர். அதிலும் ச.எண்.534/3 என தான்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி சொத்து பிதுர்ராஜிய சொத்து என கிரய ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றாலும், 0.30 செண்ட் நிலம் கிரயம் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும், சரிதான். மேற்படி சொத்திற்குரிய மூல ஆவணத்தையோ, பட்டாவையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், அ பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேன்.

61) மேற்படி வா.சா.ஆ.12 ஆவணத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எதனால் மேற்படி அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என என் நிரூபண பிரமாண பத்திரிக்கையில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். தற்போது மேற்படி அசல் ஆவணம் எங்கு உள்ளது என்றால், என் சித்தப்பாவிற்கு மேற்படி நிலத்தில் பாகம் கொடுக்கப்பட்டதால், என் சித்தப்பாவிடம் உள்ளது. மேற்படி சங்கதி குறித்து என் வழக்குரையிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. மேற்படி சொத்தில் என் தந்தைக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்பது குறித்தோ, என் சித்தப்பாவிற்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்பது குறித்தோ என் வழககுரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

62) எதற்காக மேற்படி வா.சா.ஆ.12 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால், ச.எண்.534/3B ல் பிரதிவாதிகளின் நிலம் உள்ளதாக மேறப்டி கிரய ஆவணத்தின் சக்குபந்தியில் காட்டப்பட்டுள்ளது. அதனால் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். தற்போது இவ்வழக்கு ச.எண்.534/3C க்கு தொடர்புடையது என்றால், சரிதான். ச.எண்.534/3B க்கு தொடர்புடையது அல்ல என்றால், சரிதான். (1, 2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி முதலில் 62 வது பத்தியில் முதலாவது கேள்விக்கு ச.எண்.534/B என தான் கூறினார் எனவும், பின்னிட்டு அதை ச.எண்.534/3B என மாற்றி கூறினார் என ஆட்சேபனை செய்து, 1, 2 பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனைகுட்பட்டு மேற்படி கேள்வி பதிவு செய்யப்படுகிறது.)

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.